செய்தி வெளியீடு எண்:119 நாள் :24.02.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு இன்று (24.2.2016) மேதகு தமிழ்நாடு ஆளுநர் டாக்டர் கே.ரோசய்யா அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து கடிதமும், பூங்கொத்தும் அனுப்பி பிறந்த நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மேதகு தமிழ்நாடு ஆளுநர் டாக்டர் கே.ரோசய்யா அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு அனுப்பிய பிறந்த நாள் வாழ்த்துக் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:

“I extend my heartiest greetings and best wishes to you on your birthday.

Your rich acumen, wisdom, dynamism and affection towards the people have made Tamil Nadu a model State for people’s welfare projects.

I wish you a long, happy and healthy life in your mission to steer Tamil Nadu to greater heights.”

மேலும், மாண்புமிகு ஆந்திரப் பிரதேச மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் திரு. M.வெங்கைய்யா நாயுடு ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு பிறந்த நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
நாள் : 24.2.2016